சுருக்கம்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்கள்– மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை– அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகியவற்றை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை

அரசாணை (நிலை) எண்.196

நாள்: 17.11.2017
ஹேவிளம்பி, கார்த்திகை 1,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:

தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.W1/29023/2017, நாள் 28.7.2017.

ஆணை:-

2017–2018–ஆம் ஆண்டிற்கான சட்டமன்றக் கூட்டத் தொடரில் 19.07.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

"அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு அத்தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால் தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித்தொகை 15,000/– ரூபாயிலிருந்து 20,000/– ரூபாயாக உயர்த்தப்படும். இதே போன்று அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஈமச் சடங்கு உதவித் தொகை 2,000/– ரூபாயிலிருந்து 5,000/– ரூபாயாக உயர்த்தப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர், அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகியவற்றை உயர்த்துதல் தொடர்பான தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இயற்கை மரண உதவித் தொகையினை ரூ.15,000–லிருந்து ரூ.20,000/– ஆகவும், ஈமச் சடங்கு உதவித் தொகையினை ரூ.2,000–லிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இதற்கான

.த.பி.பா.

செலவினம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் ஆகியவற்றால் அவற்றின் சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களை பொறுத்தமட்டில் அரசின் மானியத்திலிருந்தும் மேற்கொள்ளப்படும். இதற்கான கூடுதல் செலவினத்தைக் கருத்தில் கொண்டு ரூ.2.40 /– கோடி (ரூபாய் இரண்டு கோடியே நாற்பது இலட்சம் மட்டும்) கூடுதல் மானியமாக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| வ. எண் | விவரங்கள் | கணக்குத் தலைப்பு | தொகை விவரம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | 09 உதவித் தொகை 01 நடப்பு செலவுக்கான உதவித் தொகை | 2230 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு 01 தொழிலாளர் 111 தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு JA அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்திற்கு மானியம் 09 உதவித் தொகை 01 நடப்பு செலவுக்கான உதவித் தொகை (த.தொ.கு.2230–01–111– JA-0914) | 2,40,00,000/– |
| | | **மொத்தம்** | **2,40,00,000/–** |

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2017–2018–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள தொழிலாளர் ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகின்றது. இதுகுறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) குறிப்பிட்டு சேர்த்திடல் வேண்டும். 2017–2018–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும், மேலும், இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதி ( வரவு செலவு பொது–1) துறைக்கு அனுப்புமாறு தொழிலாளர் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேற்கண்ட தொகையினை தொழிலாளர் ஆணையர், சென்னை–6 அவர்கள் பெற்று, செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், சென்னை–600 102 அவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

.த.பி.பா.

இத்தொகையினை மாவட்டங்களுக்கு தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்குமாறு செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலத் திட்டம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் மற்றும் இதர 14 நலத் திட்டங்களில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982–ன் கீழான ஆலோசனைக்குழு மற்றும் வாரியங்களின் ஒப்புதல்களையும் பெற்று கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.57471/தொ.(ம).வே.வா/2017, நாள் 15.11.2017 இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.1913 (ஆயிரத்து தொள்ளாயிரத்து பதிமூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு ஓவியர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 102.

.த.பி.பா.

மாநில கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–600 018. (பெயர் உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018. (பெயர் உறையில்)
சம்பளக் கணக்கு அலுவலர்(தெற்கு, கிழக்கு, வடக்கு), சென்னை–600 035/5/1.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–600 009.
மாநில கணக்காயர் (CAS), சென்னை–600 009.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித்துறை , (வரவு செலவு பொது–I/II/தொ.(ம). வே.வா), சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–2) துறை, சென்னை–600 009. (2 நகல்கள்)
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்பபடி அனுப்பப்படுகிறது//

17/11/17
பிரிவு அலுவலர்.

17-11-17